**மாத்தளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 12 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மாத்தளை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,580,264 கூடுதலாகவும் பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,580,264 ஆல் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி மற்றும் மூலதன உள்ளீட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதி ரூபா. 68,058 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 265,934 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) காணி மற்றும் மூலதன உள்ளீட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்குகளின் மீதிகள் ரூபா. 55,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினுள் நிர்மாண வேலைகள் முடிக்கப்பட்டிருந்த 3 வீதிகளின் சரியான செலவுகள் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக வருடத்தின் மூலதனச் செலவினம் (பௌதீகத் திட்டமிடல்) மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா. 244,208 கூடுதலாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் நிலையான வைப்பின் பெறுமதி ரூபா. 3,353,317 குறைவாகவும் நிலையான வைப்பிற்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா. 2,154,582 கூடுதலாகப் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 69,449,508 ஆன 3 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் அவற்றிற்கான துணை பதிவேடு மற்றும் அறிக்கைகளுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 13,481,301 ஆக இருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் பெறவேண்டிய 11 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 39,174,680 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 849,126 ஆன மீதிகள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய 14 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 22,536,796 ஆக இருந்ததுடன், காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் ரூபா 2,859,111 ஆன மீதிகள் அதன் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகளின்மை

#### தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 55,527,951 ஆன 3 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவு | - | 2012 ஆம் ஆண்டின் பின்னர் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாதைகள் பொருட் பதிவேட்டு புத்தகத்தில் பதியப்படாமல் இருந்ததுடன் இருந்த பாதைகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட அனைத்துப் வீதிகளையும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1893 இன் 9 ஆம் இலக்க மாடுகளைக் கொல்லும் கட்டளைச் சட்டம் | | |
| i. 6 ஆம் பிரிவு | - | கோட்டேகொட பிரதேசத்தில் தனியாரினால் நடாத்தப்படுகின்ற மாடுகள் கொல்லும் இடத்திற்காக, குறித்த மாதிரியின் பிரகாரம் பிணை உறுதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| ii. 9 ஆம் பிரிவு | - | முறையாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி 2017 ஜுன் 23 ஆம் திகதிய 89930 இலக்கத்தையுடைய நிதிப் பற்றுச்சீட்டினால் குறித்த இடத்தில் மாடுகள் கொல்லும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| iii. 10 ஆம் பிரிவு | | - | அதற்கு முந்திய மாதத்தில் கொல்லப்பட்ட சகல மாடுகளினதும் விபரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| | i. 178(7)(2) ஆம் விதி | | சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கிடைக்கப் பெறுகின்ற விலைகளுக்காக கேள்விப் பெட்டியொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | ii. 178(7)(4) ஆம் விதி | 182,068 | விலைமனுக்களைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுப் பத்திரங்களுக்கு தொடராக இலக்கமிடப்பட்டு, விலை மனுக்களைத் திறக்கும் நபரினால் விலைமனுவின் ஒவ்வொரு பக்கத்திலும் தனது சுருக்கக் கையெழுத்தும் திறக்கப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |
| | iii. 217 ஆம் விதி | - | எல்லா காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ்.46 பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று நாளாதுவரையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 2,309,836 | காலாவதியான 64 நிர்மாண வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | வர்த்தமானி அறிவித்தல் | | |
| | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை A இன் அ பகுதியின் 31 ஆம் பிரிவு | | இறைச்சியின் பொருட்டு கால்நடைகளை கொல்லுமிடத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாதிருக்கையில் தனியார் தரப்பினருக்கு சபை பிரதேசதத்திற்குரிய இடமொன்றில் மாடுகளை கொல்லுமிடத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 31,767,098 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 29,033,610 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | **7,849,000** | **8,717,038** | **6,462,041** | **7,721,011** | **9,349,000** | **9,272,597** | **6,763,301** | **5,454,159** |
| வாடகை | **25,001,000** | **453,805** | **1,855,910** | **26,500** | **26,405,000** | **485,645** | **2,209,445** | **9,905** |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | **5,800,000** | **-** | **5,430,400** | **-** | **7,296,000** | **-** | **3,384,764** | **-** |
| ஏனைய வருமானம் | **24,433,000** | **22,100,000** | **4,005,392** | **21,257,306** | **19,421,000** | **34,202,140** | **4,766,243** | **30,611,340** |

### 2.2.2 வீதவரி

**(அ) வீதவரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 568,120 ஆன நிலுவை வீதவரி வருமான மீதியொன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 33 இன் பிரகாரம் நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அறவிடப்படாத வீதவரி மீதியில் அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 25,320 ஆன நிலுவை வீத வரி வருமானம் மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஏக்கர் வரி வருமானம் ரூபா 216,324 ஆக இருந்ததுடன், ஆண்டின் ஆரம்ப நிலுவையான ரூபா 212,295 ஆல் ஆண்டினுள் ரூபா 2,300 அதாவது 1 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) நீர்க் கட்டணம்**

(i) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 4,152,891 ஆக இருந்ததுடன், இதில் ரூபா 2,313,299 அல்லது 56 சதவீதம் ஒருவருடத்தை விஞ்சிய நிலுவையாக காணப்பட்டது.

(ii) 3 நீர் திட்டங்களின் பாவனையாளர்களிடமிருந்து 04 ஆண்டு காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 489,481 ஆன நிலுவைக் கட்டணம் மற்றும் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்த 9 நீர் திட்டங்களின் பாவனையாளர்களிடமிருந்து நீண்டகாலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 1,684,774 ஆன நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 375,166 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 21,257,306 ஆக இருந்தது.

**2.4 மிகை அறவீடு**

பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,426,708 ஆன மிகை அறவீட்டுத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

2017 நவம்பர் 10 ஆந் திகதிய 2045 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் (iv ஆ) பகுதியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த மாடு அறுக்குமிடம் தொடர்பான உப விதியின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் மாடுகளை அறுக்குமிட தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

(i) 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகளின் கீழ் 90 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 70 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளளவாறு அபிவிருத்தி செயற்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 21 செயற்திட்டங்கள் பொது நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படாதிருந்ததால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போதும் செயற்திட்ட திட்டமிடலின் போதும் பொதுமக்கள் தேவைப்பாடு மற்றும் ஏனைய தகவல்கள் சரியாக இனங்காணணப்பட்டு திட்டமிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

முறையான சாத்திய வள ஆய்வொன்றின் பின்னர் செயற்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் மூலதன நிகழ்ச்சித்திட்டம் - 2016 இன் கீழ் தொட்டகமுவவத்த பிராதன வீதியில் ஆரம்ப பகுதியின் ஓரக்காண் நிர்மாண வேலையை செயற்படுத்தும் போது சிக்கல்கள் தோன்றி அதற்காக கிடைத்த ரூபா 119,472 ஆன முற்பணத்தொகை 2017 சனவரி 11 ஆந் திகதி மீண்டும் உரிய அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 600,000 தொகையை பயன்படுத்ததி வேறு அபிவிருத்தி முன்மொழிவொன்று அல்லது செயற்படுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

**(ஈ) கழிவுபொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் தினந்தோறும் சேர்க்கப்படும் 3 மெற்றிக் தொன் கழிவுப் பொருட்களிலிருந்து 400 கிலோகிராம் அளவு சேதனப் பசளை உற்பத்திச்

செய்யப்படுவதுடன், கழிவுப் பொருட்களிலிருந்து அகற்றப்படும் 40 சதவீத அளவான பொலித்தீன், எரிகருவியில் எரிக்கப்படுகின்ற போதிலும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் "ஆ" பகுதியின் 27, 28 இன் பிரகாரம் சபையின் திண்மக்கழிவுப்பொருள் செயற்திட்டம் மற்றும் பொலித்தீன் எரிப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 யூன் 8 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவவினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) CP–GS 0504 இலக்கத்தையுடைய டிரக்டர் வண்டியின் மைலோமாணி 2014 ஜனவரி 13 ஆம் திகதிக்கு முன்பிருந்து செயலிழந்திருந்ததுடன் அதனை நல்ல நிலைமைக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அலுவலகம் அடங்கிய காணியை அளவிடுவதற்காக 2017 பெப்ரவரி 20 ஆம் திகதி மாத்தளை மாவட்ட நில அளவை அத்தியட்சகருக்கு ரூபா. 57,500 செலுத்தப்பட்டிருந்த போதும் குறித்த அளவை தொடர்பான அளவீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை தனது செயற்பாட்டுப் பிரதேசத்தினுள் பொது சுகாதாரத்தினை மேம்படுத்தல் மற்றும் பாதுகாக்கும் பொது நிர்வாக அதிகார சபையாக செயற்பட வேண்டியிருந்த போதும் செயற்பாட்டு நிலையில் உள்ள சபையின் 12 நீர்ப்பாசனத் திட்டங்களின் நீர் குடிப்பதற்கு உகந்த நிலையில் உள்ளதா என்பது தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு நிறுவனத்தின் மூலம் நீர் மாதிரிகள் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட 15 பதவிகளுக்குரியதாக காணப்பட்ட 43 ஊழியர் வெற்றிடங்களை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இடமாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தர்களிடமிருந்து இடர்கடன் மீதியைத் தீர்ப்பதற்காக 2016 திசெம்பர் முதல் மாதாந்த சம்பளத்தில் கழிக்கப்பட்ட ரூபா 235,930 ஆன தொகையொன்று பொதுவைப்புக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

(இ) ஓய்வூதிய நிதியத்திற்கு எழுதப்பட்ட தீர்வையாகாத ரூபா 34,564 ஆன காசோலையொன்று தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2015 ஒக்தோபர் 12 ஆந் திகதி முதல் நானாவித வைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினுள் கிடைக்கப்பெற்ற 310 கட்டிட விண்ணப்பங்களில் 214 இற்காக அனுமதி பெற்றுக் கொடுத்திருந்த போதிலும், 3 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த பெறுமதி குறிப்பிடப்படாத புகை இயந்திரமொன்று, ஓட்ட நிலைமையில்இல்லாத 5 வாகனங்கள் மற்றும் 2016 யூலை 28 ஆந் திகிதி முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2014 திசம்பர் மாதம் தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சினால் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மாவட்ட தகவல் தொழில்நுட்ப மத்திய நிலைய வேலைத்திட்டமொன்றிற்காக சபை வளாகத்தினுள் மண்டப வசதிகளையும் ஏற்பாடு செய்து கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், கணனி கதிரைகள், 40 கணனி மேசைகள் வீதம், 1 புரொஜெக்டர் திரை மற்றும் 3 குளிரூட்டி இயந்திரத் தொகுதிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்து 3 வருடங்கள் கடந்திருந்த போதும் நிலையத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக வழங்கப்பட்டிருந்த 6 UPS இயந்திரங்கள் 2017 இறுதி வரையிலும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

(இ) கழற்றி ஒதுக்கப்பட்டிருந்த 2 வாகன என்ஜின்கள், JCB இயந்திரத்தின் ஒதுக்கப்பட்ட பழைய 2 ரிம்கள் மற்றும் ரூபா. 55,970 செலவில் கொள்வனவு செய்யப்பட்டு பாவிக்க முடியாத நிலையில் இருந்த ஒரு சோனி வீடியோ கெமரா ஆகியன 2 தொடக்கம் 10 வருடங்கள் வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 பிரிவுகளுக்கமைய பிரதான பெறுகைகள் திட்டம், சிவில் வேலை, பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் அடங்கிய விபரங்களுடன் கூடிய பெறுகைத் திட்டமொன்றினையும் பெறுகைகள் கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2017 ஜனவரி தொடக்கம் நவம்பர் வரை ரூபா 4,423,194 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

**அலுவிகார சேருகல சிலைக்குச் செல்லும் பாதையை அபிவிருத்தி செய்தல்**

மாகாண வர்த்தக வாணிப மற்றும் சுற்றுலாத்துறை திணைக்களத்தின் ரூபா. 2,000,000 நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதேச சபை தயாரித்த செலவு மதிப்பீட்டின் பேரில் ரூபா. 1,846,585 தொகைக்கு குறித்த திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

நிர்மாண வேலைகள் 2017 செப்தம்பர் 06 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டு 2018 ஜனவரி 17 ஆம் திகதி ரூபா. 1,417,891 செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதிப்பீட்டின் 8 ஆம் இலக்க செலவுத் தலைப்பின் கீழ் 750 சதுர அடி பரப்பிற்கு கொங்கிரீட் கல் (Interlock Blocks) கொள்வனவு செய்து பொருத்துவதற்காக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 1,800 வீதம் ரூபா 1,350,000 மதிப்பிடப்பட்டிருந்ததுடன் குறித்த செலவுத் தலைப்பின் கீழ் செலவு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் அடிப்படை அல்லது கொங்கிரீட் கற்களின் அளவு (Size), இருக்க வேண்டிய அமுக்க பலம் (Strength) ஆகிய விதந்துரைகள் எதுவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை மற்றும் ஒப்பந்தக்காரர் இரண்டு சந்தர்ப்பங்களிலும் வர்த்தக வாணிப மற்றும் சுற்றுலாத்துறை திணைக்களம் ஒரு சந்தர்ப்பத்திலும் கொங்கிரீட் கற்களின்

தரத்தினைப் பரிசீலனை செய்திருந்ததுடன், ஒவ்வொரு பரிசீலனை அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருந்த கற்களின் அளவு பலவாறாக இருந்ததனாலும் இரண்டு தரப் பரிசோதனை அறிக்கைகளுக்கு அமைவாக கொங்கிரீட் கல் (Interlock Blocks) பொருத்துதல் தொடர்பான வழிகாட்டலுக்கமைவாக இருக்க வேண்டிய $25N/mm^2$ அளவை விடக் குறைவாக இருந்ததனால் இந்நிர்மாணிப்புக்காக பாவிக்கப்பட்டிருந்த கற்கள் போதிய தரத்தில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) அதனடிப்படையில் அச் செலவுத் தலைப்பிற்காக அரசினால் அனுமதிக்கப்பட்ட தரத்தினையுடைய கற்கள் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அக்கற்களை குறித்த தரத்திற்குட்பட்டவை என ஏற்றுக்கொள்ள முடியாததற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டி நியாயப்படுத்தி ஒப்பந்தக்காரருக்கு ரூபா. 1,079,987 தொகையொன்று கெடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையே ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும், பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையில் கணிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) 3 வருமான விடயங்களுக்குரிய ரூபா 16,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 24 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையில் 44 சதவீதம் முதல் 1160 சதவீதம் இடையில் வீச்சளவான விலகல்கள் காணப்பட்டன.

(இ) 21 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 42 சதவீதம் முதல் 99 சதவீதம் இடையில் வீச்சளவான விலகல்கள் காணப்பட்டன

(ஈ) 2 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 215,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமொன்று செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் சபையின் பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஆக்கபூர்வமான முறையில் அக்குழுத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | | | **முறைமையின் குறைபாடுகள்** |
|---|---|---|---|
| (அ) | பதவியணியினர் முகாமைத்துவம். | (i) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படல் |
| | | (ii) | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தல் |
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | குறைப்பயன்பாட்டுடனும் விளைவற்றும் காணப்படல் |
| | | (ii) | சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படாமை. |
| | | (iii) | முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு வழங்குதல் |
| | | (iv) | உரித்தினை உறுப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | எரிபொருள் எரிவு பயன்படுத்தப்படாமை |
| | | (ii) | வாகனங்கள் குறைப்பயன்பாட்டுடனும் விளைவற்றும் காணப்படல். |
| | | (iii) | முறையற் விகையில் வெளித்தரப்பினருக்கு வழங்குதல். |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை. |
| | | (ii) | வருமான இலக்கை பூர்த்தி செய்யாமை. |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | | களஞ்சியப் பொருட்கள் சரியாக பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |